**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 522/2023**

**Prosecution witness : அ.சா.13** **Date : 29.09.2025.**

| | |
|---|---|
| **Name : ரத்தினவேல்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சந்திரமாகடையில் குடியிருந்து டீ கடை வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 2023ம் வருடம் ரவி கடை அருகே விபத்து நடந்ததாக சொன்னார்கள். வேறு ஒன்றும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) கடந்த 09.08.2023ம் தேதி மாலை 3.30 மணியளவில் நான் என் கடையிலிருந்த போது எனக்கு தெரிந்த கதிரேசன் என்பவர் TN 30 CB 2724 இரு சக்கர வாகனத்தை அவருடைய அக்கா மகள் நந்தினி என்பவரை உட்கார வைத்துக் கொண்டும், அவர்களுக்கு முன்னால் TN 30 CA 7839 இரு சக்கர வாகனத்தை சுரேஷ்குமார் ஓட்டிக் கொண்டும் அவருக்கு பின்னால் வளர்மதி அமர்ந்து கொண்டும் சென்ற போது அவர்களுக்கு முன்னால் ஓமலூர் டூ மேச்சேரி ரோட்டில் சந்திராமாள் பேருந்து நிறுத்தம் அருகே புக்கம்பட்டி செல்லும் ரோட்டில்

தெற்கிலிருந்து வடக்காக ரோட்டை கடந்த போது மேச்சேரி டூ ஓமலூர் நோக்கி மேற்கிலிருந்து கிழக்காக TN 54 V 7779 இனவோ காரை ஓட்டி வந்த ஆஜர் எதிரி சுரேஷ்குமார் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி அவருக்கு பின்னால் வந்த வளர்மதி என்பவர் கீழே விழுந்து தலையில் பலத்த காயம் ஏற்பட்டது என்றும் சம்பவத்தை நேரில் பார்த்து விட்டு தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு ஆஜர் எதிரி காரணம் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.09.29 16:28:58 +0530

**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**